ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1843/4- 2013 දෙසැම්බර් මස 30 වැනි සඳුදා - 2013.12.30

*1843/4 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

***1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான) ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 223 ஆம் பிரிவின் கீழ் உள்ள குறித்தொதுக்கல்***

மேல் மாகாணத்தின் கௌரவ முதலமைச்சரும் நிதி, திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், வர்த்தகம், மின்சக்தி மற்றும் எரிசக்தி, மனிதவழு மற்றும் வேலைவாய்ப்பு, பொருளாதார ஊக்குவிப்பு தொடர்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான) ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 223 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய கீழ் தரப்பட்டுள்ள குறித்தொதுக்கலை இத்தால் அறிவிக்கின்றேன்.

பிரசன்ன ரணதுங்க,<br>
மேல் மாகாண மாகாண சபையின் கௌரவ முதலமைச்சரும்<br>
நிதி, திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி,<br>
உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், வர்த்தகம், மின்சக்தி மற்றும்<br>
எரிசக்தி, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு, பொருளாதார<br>
ஊக்குவிப்பு தொடர்பான அமைச்சரும்.

மேல் மாகாண முதலமைச்சு,<br>
சிராவஸ்தி மத்திரய,<br>
ஸ்ரீமத் மாகஸ் பெர்னாந்து மாவத்த,<br>
கொழும்பு - 07,<br>
*2013, திசெம்பர் 30.*

குறித்தொதுக்கல்

1. இக்குறித்தொதுக்கல் மேல் மாகாணத்தின் பிரதேச சபைகளின் 2014 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட அட்டவணையை அமுல் செய்தல் தொடர்பான குறித்தொதுக்கல்களாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

2. மேல் மாகாணத்தினுள் ஏதாவது பிரதேச சபைக்காக 2014 ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவுத் திட்ட அட்டவணையொன்று ஏதாவது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 168 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், உடன்பாடு காணப்படாத வேளையில் மற்றும் 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களின் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 17 ஆம் பிரிவின் பிரகாரம், உரிய பிரதேச சபையின் தலைவர் பதவி வெற்றிடமாக காணப்படும் போது, அத்தகைய வெற்றிடமாகவுள்ள பதவியை நிரப்புவதற்காக 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களின் வாக்கெடுப்பு (திருத்தப்பட்டவாறான) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்படாத சந்தர்ப்பத்தில் அல்லது அவ்வாறு வெற்றிடமாகவுள்ள பதவிக்காக நியமிக்கப்பட்டுள்ள தலைவர் ஒருவருக்கு 2014 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட அட்டவணையை,

உடன்பாடு காண்பதற்கு உரிய தீர்மானத்தை சபையில் சமர்ப்பிப்பதற்கு அதற்குரிய எழுத்துமூலமான சட்டத்திற்கு அமைவாகவுள்ள ஆகக் குறைந்த நாள் அளவு எஞ்சியிராத சந்தர்ப்பத்தில் உரிய பிரதேச சபைக்கு 2014 ஆம் ஆண்டிற்காக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள ஏதாவது வரவு செலவுத்திட்ட அட்டவணையொன்றை உரிய பிரதேச சபை அமைந்துள்ள மாவட்டத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அனுமதியின் கீழ் அப்பிரதேச சபையினால் 2014 ஆம் ஆண்டிற்காக நடைமுறைப்படுத்துவது, சட்டரீதியானதாகும்.

3. இக் குறித்தொதுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள சகல ஏற்பாடுகளும் 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களின் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் மற்றும் 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களின் வாக்கெடுப்பு (திருத்தப்பட்டவாறான) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும்.

1- 416/1

---

**மேல் மாகாண மாகாண சபை**

**1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான) ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படவேண்டிய 255 ஆம் அதிகாரத்தின் நகரசபை கட்டளைச் சட்டத்தின் 247 ஆம் பிரிவின்கீழ் உள்ள குறித்தொதுக்கல்**

மேல் மாகாணத்தின் கௌரவ முதலமைச்சரும் நிதி, திட்டமிடல் , சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், வர்த்தகம், மின்சக்தி மற்றும் எரிசக்தி, மனிதவமு மற்றும் வேலைவாய்ப்பு, பொருளாதார ஊக்குவிப்பு தொடர்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான) ஏற்பாட்டுகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 255 ஆம் அதிகாரமாகிய நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 247 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய கீழ் காட்டப்பட்டுள்ள குறித்தொதுக்களை இத்தால் அறிவிக்கின்றேன்.

பிரசன்ன ரணதுங்க,
மேல் மாகாண மாகாண சபையின் கௌரவ முதலமைச்சரும்
நிதி, திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி,
உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், வர்த்தகம், மின்சக்தி மற்றும்
எரிசக்தி, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு பொருளாதார
ஊக்குவிப்பு தொடர்பான அமைச்சரும்.

மேல் மாகாண முதலமைச்சு,
சிராவஸ்தி மத்திரய,
ஸ்ரீமத் மாகஸ் பெர்னாந்து மாவத்த,
கொழும்பு - 07,
2013, திசெம்பர் 30.

குறித்தொதுக்கல்

1. இக்குறித்தொதுக்கல் மேல் மாகாணத்தின் நகர சபைகளின் 2014 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட அட்டவணையை அமுல் செய்தல் தொடர்பான குறித்தொதுக்கல்களாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

2. மேல் மாகாணத்தினுள் ஏதாவது நகர சபைக்காக 2014 ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவுத் திட்ட அட்டவணையொன்று ஏதாவது 255 ஆம் அதிகாரமாகிய நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 178 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உடன்பாடு காணப்படாத வேளையில் மற்றும் 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களின் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் , உரிய நகர சபையின் தலைவர் பதவி வெற்றிடமாக காணப்படும் போது அத்தகைய வெற்றிடமாகவுள்ள பதவியை நிரப்புவதற்காக 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களின் வாக்கெடுப்பு (திருத்தப்பட்டவாறான) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்படாத சந்தர்ப்பத்தில் அல்லது அவ்வாறு வெற்றிடமாகவுள்ள பதவிக்காக நியமிக்கப்பட்டுள்ள தலைவர் ஒருவருக்கு 2014 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட அட்டவணையை, உடன்பாடு காண்பதற்கு உரிய தீர்மானத்தை சபையில் சமர்ப்பிப்பதற்கு அதற்குரிய எழுத்துமூலமான சட்டத்திற்கு இசைவாகவுள்ள ஆகக் குறைந்த நாள் அளவு எஞ்சியிராத சந்தர்ப்பத்தில் உரிய நகர சபைக்கு 2014 ஆம் ஆண்டிற்காக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள ஏதாவது வரவு செலவுத் திட்ட அட்டவணையொன்றை உரிய நகர சபை அமைந்துள்ள மாவட்டத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அனுமதியின் கீழ் அந்த நகர சபையினால் 2014 ஆம் ஆண்டிற்காக நடைமுறைப்படுத்துவது சட்டரீதியானதாகும்.

3. இக் குறித்தொதுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள சகல ஏற்பாடுகளும் 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களின் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் மற்றும் 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களின் வாக்கெடுப்பு (திருத்தப்பட்டவாறான) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும்.

1- 416/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.